# இரட்சிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் கிடைத்திருக்கும் சிலாக்கியங்களில் சிலவற்றை தீர்க்கதரிசி பிரன்ஹாம் செய்தியிலிருந்து பார்ப்போம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

இரட்சிக்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் வராத இந்த உலகத்தாருக்கு கிடைக்கப்பெறாமல், இரட்சிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரம் கிடைத்திருக்கும் சிலாக்கியங்களில் சிலவற்றை தீர்க்கதரிசி பிரன்ஹாம் செய்தியிலிருந்து பார்ப்போம்.

---

❶

## இந்த மறைவிடம் அல்லது இந்த புகலிடமானது, இந்த உலகத்திற்கோ பாவிகளுக்கோ கிடையாது

செய்தி: **பயன்படுத்தப்பட்ட ஓர் சால்வை**

10. நமக்கு ஒரு மறைவிடம் இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

‘கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்.’

எத்தனை குண்டுகளோ அல்லது மற்ற எதுவுமோ போடப்பட்டாலும் கவலை

யில்லை, நாம் அங்கே பாதுகாப்பாக இருக்கிறோம்.

எனவே இந்த மறைவிடம் அல்லது இந்த புகலிடமானது, இந்த உலகத்திற்கோ பாவிகளுக்கோ கிடையாது. இது ஒரு அசைக்கும் நேரமாக உள்ளது.

நான் ஒரு கிறிஸ்தவனாக இல்லா திருந்தால், எந்த நேரத்தில் எது சம்பவிக் குமோ என்று எண்ணிக்கொண்டு பித்து பிடித்தவனாய் இருந்திருப்பேன் என்று நம்புகிறேன்.

வீடு முழுவதும் சிறு பிள்ளைகளும் மற்றும் ஒவ்வொன்றும் இருக்கையில், என்ன செய்ய வேண்டுமென்று எனக்கு தெரியாது.

ஆனால் நான் என்னுடைய வீட்டில் நின்று, எந்த குண்டுகளும் வேறு எதுவும் தொட முடியாத ஒரு மறைவிடத்தை அவர் களுக்கு அறிமுகப்படுத்த முடிவதற்காக மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

கர்த்தராகிய இயேசுவின் பாதுகாக்கும் செட்டைகளின் கீழே.

'பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தி னாலும் அல்ல, என்னுடைய ஆவியி னாலே ஆகும் என்று கர்த்தர் சொல்லு கிறார்.' பாருங்கள்? அதுவே நம்முடைய பாதுகாப்பு.

❷

## உலகத்திற்கு தேற்றரவாளன் கிடையாது

செய்தி: **அவர் உங்களை விசாரிக்கிறவர்**

27. இந்த வேதவாக்கியத்தின் மற்றொரு செய்தி என்ன வெனில், அவர் பிதாவிடம் ஜெபித்து, வேறொரு தேற்றரவாளனை நமக்குக் கொடுப்பார் என்பதாகும்.

அந்த தேற்றரவாளன் பரிசுத்த ஆவியே.

அவரை உலகம் பெற்றுக்கொள்ள மாட்டாது, ஆனால் விசுவாசிகளுக்கு அவர் ஒரு தேற்றரவாளன் ஆவார்.

❸

## பாவிகளுக்கு தூதர்கள் இருப்பார்கள் என்று வாக்களிக்கப்படவில்லை

செய்தி: **கேள்விகளும் பதில்களும் (COD 2:22), ஆகஸ்டு 30, 1964 மாலை, பத்தி எண் 52**

இப்பொழுது, ஒரு தூதன் உண்டு. ஆனால் இந்த கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்குகிறான் (சங் 34:7).

பாருங்கள்? பாவிகளுக்கு தூதர்கள் இருப்பார்கள் என்று வாக்களிக்கப்பட வில்லை.

மீட்கப்பட்டவர்களுக்கு மாத்திரமே தூதர்கள் உள்ளனர். அது உங்களுக்குத் தெரியுமா?

கர்த்தருடைய தூதர்கள் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கு கின்றனர்.

---

